Nallur-01-1286 S. Arkesh

# நல்லூர், யாழ்ப்பாணக் கல்விக்கோட்டம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2015

| தரம் : 09 | வரலாறு<br>பெயர் / சுட்டெண் : ........................................................ | நேரம் :<br>2.30 மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி - I

**பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக**

01. பிரித்தானியர் இலங்கை முழுவதையும் தமது ஆட்சிக்கு உட்படுத்திய ஆண்டு
1. கி.பி 1796 2. கி.பி 1802 3. கி.பி 1803 4. கி.பி 1815

02. பிரித்தானியர் காலத்தில் கடற்படைத் தலைமையகமாக இருந்த பிரதேசம்
1. திருகோணமலை 2. காலி 3. கொழும்பு 4. யாழ்ப்பாணம்

03. 1797 இல் கரையோரத்தில் மக்கள் கிளர்ச்சி செய்தமைக்கு உடனடிக்காரணமாக அமைந்த வரி
1.மீன்வரி 2. உப்பு வரி 3. புகையிலைவரி 4. தென்னைவரி

04. மலையக இராட்சியத்தைக் கைப்பற்றுவதற்குப் பொருத்தமான சூழலை உருவாக்கியவர்
1. ஜோன் டொயிலி 2. ஜோன்பைப்பஸ் 3. பிலிமத்தலாவ 4. ஹியுட் பொயிட்

05. கி.பி 1782 இல் இராஜாதி ராஜசிங்கனைச் சந்தித்த பிரித்தானிய தூதுவர்
1. ஸ்பில் பேஜன் 2. ஜோன்பைபஸ் 3. ஹியுட் பொயிட் 4. றொபட் அன்ட்றூஸ்

06. யூரிசபை மூலம் வழக்குகளை விசாரிக்கும் முறையை அறிமுகப்படுத்திய ஆளுநர்
1. பிரடெறிக் நோத் 2. தோமஸ் மெயிட்லண்ட்
3. றொபேட் பிறவுண்றிக் 4. டொறிங்ரன்

07. "உங்களுடைய ஆயுதங்களால் உங்களைத் தாக்க மாட்டேன்" என்று கூறிப் பிரித்தானியப் படைகளைத் திருப்பி அனுப்பிய பிரதானி
1. பிலிமத்தலாவ 2. மடுகல்லதிஸாவ
3. எஹலபொல 4. ஹெப்பட்டிபொல திஸாவ

08. நிரல் Aயில் தரப்பட்டுள்ள விடயங்களை B நிரலில் தரப்பட்டுள்ள யாப்புச் சீர்திருத்தங்களுடன் தொடர்புபடுத்தினால் வரும் சரியான விடைத்தொகுதி

| நிரல் A | நிரல் B |
|---|---|
| 1. சர்வஜனவாக்குரிமை | A. கோல்புறூக் |
| 2. ஆங்கிலக்கல்வி அறிமுகம் | B. சோல்பரி |
| 3. இருசபை கொண்ட பாராளுமன்றம் | C. மனிங் |
| 4. மாகாண ரீதியாக தெரிவு முறை | D. டொனமூர் |

1.DABC 2.DBAC 3.ADBC 4.CABD

09. இலங்கைத் தேசிய சங்கத்தின் முதலாவது தலைவராக விளங்கியவர்
1. சேர். பொன் இராமநாதன் 2. D.S. சேனநாயக்க
3. சேர். பொன் அருணாசலம் 4. A.E. குணசிங்க



kalvi.lk

10. சர்வஜன வாக்குரிமை வழங்குவதற்கு ஆதரவாக கருத்துக்களை முன்வைத்த புரட்சித் தலைவர்
1. A.E. குணசிங்க
2. D.P. ஜயதிலக
3. S.A. விக்ரமசிங்க
4. D.S. சேனநாயக்க

11. யாழ்ப்பாணம் உட்பட வடபகுதி முழுவதும் இயங்கிய மிஷனரி
1. பப்டிஸ்ட் மிஷனரி
2. வெஸ்லியன் மிஷனரி
3. சேர்ச் மிஷனரி
4. அமெரிக்கன் மிஷனரி

12. மாளிகா கந்தை வித்தியோதய பிரிவெனாவை நிறுவியவர்
1. ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர்
2. வலானே சித்தார்த்த தேரர்
3. ரத்மலானை ஸ்ரீ தர்மலோக தேரர்
4. மீக்கெட்டுவத்த குணானந்த தேரர்

13. 1935 இல் லங்கா சமசமாஜக் கட்சியை ஆரம்பித்தவர்
1. S.W.R.D பண்டாரநாயக்க
2. பிலிப் குணவர்த்தன
3. N.M பெரேரா
4. டட்லி சேனநாயக்க

14. D.S. சேனநாயக்கவால் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பலநோக்கு அபிவிருத்தித்திட்டம்
1. மகாவலி அபிவிருத்தித் திட்டம்
2. கல்லோயா அபிவிருத்தித்திட்டம்
3. உளவளவை அபிவிருத்தித் திட்டம்
4. உமாஓயா அபிவிருத்தித்திட்டம்

15. சோல்பரி யாப்புச் சீர்திருத்தத்திற்குப் பொருத்தமற்ற விடயம்
1. பிரதமர் தலைமையிலான அமைச்சரவை காணப்படல்
2. ஆளுநர் நாயகம் முடியின் பிரதிநிதியாக செயற்படல்
3. நிர்வாகக்குழுமுறை அறிமுகமாதல்
4. அரசாங்கச்சேவை ஆணைக்குழு அமைக்கப்படல்

16-18 வரையான வினாக்களிற்கு கீழ்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.

A. ஹென்றி ஸ்டீல் ஒல்கொட்
B. D.S சேனநாயக்க
C. அநகாரிக தர்மபால
D. F.R. சேனநாயக்க
E. சேர். பொன் இராமநாதன்
F. சேர். பொன் அருணாசலம்

16. யாழ் பரமேஸ்வராக் கல்லூரி, கொழும்பு ஆனந்தாக் கல்லூரியை உருவாக்கியவர்கள் முறையே
1. AE
2. EA
3. FD
4. EB

17. மது ஒழிப்பின் பொருட்டு முன்னின்று உழைத்த தலைவர்களைக் குறிக்கும் விடைத்தொகுதி
1. BDC
2. BEC
3. ADB
4. DEF

18. 1891 இல் மகாபோதி சங்கத்தை ஆளுநர் நாயகம்
1. D
2. B
3. E
4. C

19. இலங்கையின் முதலாவது ஆளுநர் நாயகம்
1. சோல்பரி பிரபு
2. ஹென்றி மங்க் மேசன் மூவர்
3. ஒலிவர் குணதிலக
4. வில்லியம் கோபல்லாவ

20. இலங்கை ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் பெற்ற போது பிரதமராக இருந்தவர்
1. D.S சேனநாயக்க
2. டட்லி சேனநாயக்க
3. S.W.R.D பண்டாரநாயக்க
4. சேர். ஜோன் கொத்தலாவல

(20x2= 40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி - II

**முதலாம் வினாவிற்கும், ஏனைய நான்கு வினாக்களுக்கும் மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. அ) i) இரண்டாம் தவணையில் வரலாற்றுப் பாடத்தில் ஆசிரியரால் உமக்கு வழங்கப்பட்ட கணிப்பீட்டு வகைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

ii) இக் கணிப்பீட்டு வகைகளை மேற்கொண்ட பாட அலகுகளைத் தருக.

iii) இக் கணிப்பீட்டுச் செயற்பாட்டினை மேற்கொண்டதன் மூலம் நீர் பெற்றுக் கொண்ட நன்மைகள் இரண்டினைக் குறிப்பிடு.

(2 + 2 + 2 = 6 புள்ளிகள்)

ஆ) தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தினைப் பயன்படுத்திக் கீழுள்ள கூற்றுக்குப் பொருத்தமான இடங்களைக் குறிக்கும் எழுத்துக்களைக் குறிப்பிடுக.




Education கல்வி

i) கோல்புறூக் சீர்திருத்தத்தின் கீழ் வடக்கு மாகாணத்தின் நிர்வாக மையத்தைக் குறிக்கும் எழுத்து (..........)

ii) பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றக் காரணமாக இருந்த திருகோணமலைத் துறைமுகத்தைக் குறிக்கும் எழுத்து (..........)

iii) முதலாம் சுதந்திரப் போராட்டம் நடைபெற்ற ஊவா வெல்லஸ்ஸ பிரதேசத்தைக் குறிக்கும் எழுத்து (..........)

iv) இலங்கையில் இறுதிச் சுயாதீன மன்னராட்சி நிலவிய இராட்சியத்தின் தலைநகரைக் குறிக்கும் எழுத்து (..........)

v) பிரித்தானியர் ஆட்சியில் இலங்கையின் நிர்வாக மத்திய நிலையத்தைக் குறிக்கும் எழுத்து (..........)

vi) 1915 சிங்கள முஸ்லீம் கலவரத்திற்குக் காரணமான இடத்தைக் குறிக்கும் எழுத்து (..........)

(6 புள்ளிகள்)



kalvi.lk

02. பின்வரும் நிகழ்வுகளுடன் தொடர்புடைய ஆளுநர்களைக் குறிப்பிடுக.

i) A. இராச காரிய முறையை ஒழித்த முதலாவது ஆளுநர்
   B. கண்டியைக் கைப்பற்றிய ஆளுநர்
   C. 1848 கிளர்ச்சிக்குக் காரணமான புதிய வரிகள் விதித்தவர்

ii) 1815 கண்டி உடன்படிக்கையில் கூறப்பட்ட நான்கு விடயங்களைக் குறிப்பிடுக.

iii) 1818 ஆம் ஆண்டு முதலாம் சுதந்திரப் போராட்டத்திற்கான காரணங்கள் 3 ஐக் குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக.

(3 + 4 + 5 = 12புள்ளிகள்)

03. பின்வரும் அரசியல் சீர்திருத்தங்களுடன் தொடர்புடைய யாப்புச் சீர்திருத்தங்களைத் தருக.

i) A வர்த்தக ஏகபோக உரிமை நீக்கப்பட்டமை
   B உத்தியோகப்பற்றற்றோர் தொகை முதலில் அதிகரித்தமை
   C வரையறுக்கப்பட்ட வாக்குரிமை வழங்கப்பட்டமை

ii) கோல்புறூக் சீர்திருத்தங்கள் 4 ஐ குறிப்பிடுக.

iii) டொனமூர் ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட சிபாரிசுகள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றினை விளக்குக.

(3 + 4 + 5 =12 புள்ளிகள்)

04 i) இலங்கையை ஆட்சி செய்த ஐரோப்பிய இனத்தவர்கள் மூவரைத் தருக.

ii) ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் செயற்பட்ட மிஷனரி இயக்கங்கள் 4 தருக.

iii) இலங்கை மீது ஐரோப்பிய நாட்டவர்கள் கவனம் செலுத்தியமைக்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக.

(3 + 4 + 5=12 புள்ளிகள்)

5) i) இலங்கையில் ஐம்பெரும் விவாதங்கள் நடைபெற்ற இடங்கள் 3 தருக.

ii) 19ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் செயற்பட்ட அரசியல் இயக்கங்கள் 4 குறிப்பிடுக.

iii) இந்து சமய மறுமலர்ச்சிக்கு ஆறுமுகநாவலர் ஆற்றிய பணிகள் 3 ஐக் குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக.

6) i) பின்வரும் கட்சிகளை உருவாக்கிய தலைவர்களைக் குறிப்பிடுக.

A. இலங்கைத் தமிழரசுக் கட்சி
B. ஐக்கிய தேசியக் கட்சி
C. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

ii) மது ஒழிப்பு இயக்கத்தின் செயற்பாடுகள் இரண்டினைத் தருக.

iii) C.W.W கன்னங்கரா ஆற்றிய சேவைகள் 3 ஐக் குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக.

(3 + 4 + 5 =12 புள்ளிகள்)



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி அධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457